திராவிடநாடு

11—6—61 | வார வெளியீடு | விலை 16 காசு

இன்னொருவர் தயவெதற்கு?

[சா. கா. சாகுல் அமீது]—

அல்லென்றும் பகலென்றும் பாரா தென்றும்
    அடுமழையைக் கடுவெயிலை அசட்டை செய்து
கல்லென்றும் முள்ளென்றும் கவலைக் காமல்
    கடுமுழைப்பால் உடல்வருத்திக் கால மெல்லாம்
தில்லிக்குத் திறைசெலுத்தித் தினமும் வாழ்ந்தால்
    திசைமாறித் துயர்கடலில் வீழ்வோம் தாழ்ந்தே!
புல்லுக்கு நீர்பாய்ச்சிப் பொழுதும் போற்றிப்
    புரைவளர்த்துப் புகழ்பெற்றோர் உலகில் உண்டோ?

கடலுண்டு விளைநிலமும் தொழிலும் உண்டு
    கடுமுழைப்பை வழங்குகின்ற தடந்தோள் உண்டு
உடலுண்டு புகழ்உடலில் உறுதி உண்டு
    உயிருள்ள கருத்துண்டு கடமை உண்டு
திட அறிவும் திகழ்நெறியும் திறனும் கொண்டு
    திருவிடத்தை மீட்பதற்குத் துணிவும் உண்டு
சுடர்மதியும் படர்ஒளியும் போன்று வாழ்வோம்
    சுற்றத்தோடு; இன்னொருவர் தயவெ தற்கு?

மன்னிப்பு

—(கனகு)—

ஓரே ஒரு நிமிட நேரங்கூட அந்த மல்லிகை மாலையைப் பேச்சாளர் பெரியசிவம் கழுத்திற் போட்டுக்கொண்டிருக்கவில்லை. அந்த மாலை ஐந்தாவது தடவையாக அவர் கழுத்திற் போடப்பட்ட மாலை. அதற்கு முன்னுல் போடப்பட்ட நான்கு மாலைகளையும் ஏதோ வழக்காறு என்ற முறையில் ஏற்றுக்கொண்டு, மேசைமீது எடுத்து வைத்தவர், கடைசியாகப் போடப்பட்ட அந்த மல்லிகை மாலையையும், அதே அசட்டையோடு மேசைமீது எடுத்து வைக்க விரும்பவில்லை. மாலை மரியாதைக்காக இரண்டு நிமிடங்கள் தம் பேச்சை நிறுத்திக் கொண்டிருந்த பெரியசிவம், பின்னும் ஒரு நிமிடம் இந்த மல்லிகை மாலைக்காகச் செலவழித்தார். கவர்ச்சி நிறைந்த அதன் வெண்மை நிறமோ, மனத்தை மயக்கும் அதன் நறுமணமோ, அல்லது பாங்காக, எடுப்பாக, நெருக்கமாகத் தொடுக்கப்பட்டிருப்பதால் அது நல்குகின்ற எழிற் செறிவோ — எது அவர் உள்ளத்தைப் பெரிதும் தன் பக்கம் இழுக்கச் செய்தது என்று அவராலேயே உணர்ந்துகொள்ள முடியவில்லை. அந்தத் தடுமாற்றத்தில் ஒரு நிமிடம் பின்னும் கழிந்தது.

பெரியசிவம் தம் பேச்சைத் தொடங்கினுர். இரண்டொரு வார்த்தைகள் பேசினுர். கையிலெடுத்த மல்லிகை மாலை கையிலேயேயிருந்தது. எண்ணம் அந்த மாலையைச் சுற்றிச் சுற்றி வந்தது. பேச்சு ஓடவில்லை. அது என்றுமில்லாப் புதுமை அவரைப் பொறுத்த மட்டில். ஆமாம், அவர்கூடப் புதிய மனிதராகத்தானே மாறிவந்து, அங்கே மேடையேறி நிற்கிருர் இன்று.

பேச்சாளர் பெரியசிவம் எத்துணையோ கூட்டங்களிற் பேசியிருக்கிருர். அதுவரை அவர் பேசிய கூட்டங்கள் எல்லாம் பாட்டாளியர் மிகுந்த கூட்டங்கள்தாம். கிழிந்து, அழுக்கடைந்துபோன உடைகளையுடையோர், எண்ணெய் காணுத தலையும், ஈரம் வற்றிப் பஞ்சடைந்துபோன கண்களும், தென்பிழந்து, வலியிழந்துபோன உடலும் உடையோரைத்தான் அவர் அதுவரை நாள்தோறும், நாள்தோறும் சந்தித்துக்கொண்டு வந்திருக்கிருர் கூட்டங்களில்.

கண்முன்னுல் திரண்டு நிற்கும் ஆயிரமாயிரம் மக்களின் அவல நிலையும், அந்த நிலை அவர்கட்கெல்லாம் வந்துற்ற வகையும் பளிச்செனத், தெள்ளென அவர் உள்ளத்தே வந்து குத்திக்கொண்டு நிற்கும். அந்தச் சூழலில் அவரே அந்தப் பாட்டாளியருள் ஒருவராக மாறிவிடுவார். எனவே, அவர் பேச்சு, எந்த இடத்திலும் தடைப்படாமல் மளமளவென்று ஓடிக்கொண்டேயிருக்கும். தயக்கம் அங்கே தலைகாட்டாது. தவிப்பு அங்கே தோன்றவே தோன்ருது. சலசலவென்று — தடைப்படாமல் ஓடும் சிற்ருேடையாக அவர் பேச்சு, சிலவேளை மிளிரும். 'சோ'வென்று பொழியும் மழையின் ஒலியாகச் சில வேளை விளங்கும். திடுதிடுவென்று கரையைப் பெயர்த்துக் கொண்டோடும் காட்டாற்று வெள்ளமெனச் சில வேளை பேரோசையும் பெருவேகமும்கொண்டு பிறங்கும். ஆக, இந்த மாற்றங்கள் தவிர, அவர் பேச்சிலே வேறு எந்த வகை மாறுபாடும் காணமுடியாது.

இன்று, ஏனே அவர் தம் கையிலிருந்த மாலையையே உற்று நோக்கத் தொடங்கினுர். அதைப்பற்றி எண்ணினுர். பிறகு — ஒருவாறு— எதிரே நின்ற கூட்டத்தைப் பார்த்தார். பின்னும் ஏனே தயங்கி நின்ருர்.

இதுவரை அவர் கண்டுவந்த கூட்டம் வேறு. இன்று அவர் கண் முன்னே தென்படும் சிறு கும்பலின் —ஆமாம், அங்கே பெருங்கூட்டமில்லை—தன்மைவேறு, நிலைவேறு, தரம்வேறு, குணம் வேறு; நடைநொடி பாவனைகள் அத்துணையும் வேறு வேறு.

ஏற்கனவே தாம் எங்கு பேசப் போகிருேம் என்பது அவருக்குத் தெரியாதது அல்ல. அங்கு என்ன பேசவேண்டும் என்பதையும், எப்போதும் இல்லாத புது வழக்காக இன்று புறப்படும்போதே சித்தம் செய்துகொண்டுதான் அங்கு வந்திருந்தார். என்ருலும், பேசத்தான் அவரால் முடியவில்லை. பாவம், மேடைமீது நின்றுகொண்டு அவர் படாதபாடுபட்டார். எதிரே இருப்பவர்களாவது அவர் பேசுதற்கான ஆக்கப்பொருளை எடுத்து வழங்குவார்களா என்று பார்த்தார். அவர்களும் தங்கள் பார்வைமூலம் எது எதையோ வழங்கத்தான் வழங்கினுர்கள். ஆனுல்; அந்த வகை வழங்கலை அதுவரை அவர் ஏற்றிருந்தவர் அல்லர். அதை எவ்வாறு கையாளவேண்டும் என்று திடும் என்று அவருக்குப் பிடிபடவில்லை.

(4-ம் பக்கம் பார்க்க)

சச்சரவும் சமரசமும்!!

19] ஆண்டு சந்தா ரூ. 8 (11—6—61) தனிப்பிரதி 16 காசு [இதழ் 4

மொழி காரணமாக அசாம் மாநிலத்தில் ஏற்பட்ட சச்சரவு, சண்டையளவில் வளர்ந்து, கொலையளவுக்குப் போய்ப் பெரிய குழப்பத்தை உண்டுபண்ணி, நாட்டை ஒரு உலுக்கு உலுக்கிவிட்டு, இப்போது, உள்நாட்டமைச்சர் லால்பகதூர் சாத்திரியாரின் முயற்சியால் ஒருவாறு சமரசமாக்கப்பட்டுவிட்டதாகக் கூறப்படுகிறது.

உள்நாட்டமைச்சரின் சமரசமுயற்சியைப்பாராட்டுகிறோம். ஒருவரோடொருவர் சண்டை போட்டுத் தகராறு வளர்ப்பதைத் தடுப்பது பொறுப்புக்களை ஏற்றுள்ள ஒரு அமைச்சரின் கடமையாகும். மேலும்மேலும் தகராறு வளர்ந்து, சமாளிக்க இனி முடியாதென்ற அளவு முற்றுமுன், முன்வந்து சமரசம்கண்ட அமைச்சரை மீண்டும் ஒருமுறை பாராட்டுகிறோம்.

நாட்டில், எந்தப் பகுதியிலும், எந்தவிதமான சச்சரவுகளும் இல்லாமல் அமைதி தவழும் நிலையில் சமாதான உணர்வோடு மக்கள் வாழவேண்டுமென்பதை இலட்சிய மாகக்கொண்டவர்கள் நாம்.

உள்ளத்தில் தூய்மையும், கொள்கையில் களங்கமின்மையும், இலட்சியத்தில் பிடிவாதமும் உள்ள எவரும், நாடு காடாக வேண்டுமென்பதை விரும்பார்.

இந்த நல்லெண்ணம் இப்போது, இத்துணைக்கண்டத்தைத் தவிர, மற்ற நாடுகளில் பெரும்பாலும் உண்டாக்கிச் செயல்பட்டு வருவதை அன்றாட நிகழ்ச்சிகளாகக் கண்டு வருகிறோம்.

பிரிக்கமுடியாது—பிணைப்பிலிருந்து, விடுபட்டால் வாழமுடியாது—வாழவிடமாட்டோம் என்று பிடிவாதம் செய்த வல்லரசுகள் பல இப்போது உலகப்போக்கை நன்குணர்ந்து, இனியும் தங்கள் பிடிவாதம் எடுபடாது என்பதனை அறிந்து தங்கள் தங்கள் முறைகளை மாற்றிப் பிடிகளைத் தளர்த்திவருகின்றன.

பூகோளமும், வரலாறும் மாற்றி எழுதப்படுமளவுக்கு நிலைமைகள் திருப்பப்படுவதையும், திருத்தப்படுவதையும் காண்கின்றோம்.

ஆனால், இங்கு மட்டும் அந்த நல்ல—சீரிய எண்ணம் இன்னும் முளைவிடவில்லை.

முளைவிடச்செய்யும் முகாமில் இருப்பவர்களுக்கு, அப்படியொரு முளைகிளம்பிவிட்டால், அல்லது கிளம்பும்படி செய்துவிட்டால்; தங்களுக்கு எங்கே ஆபத்து வந்துவிடுமோ என்ற அச்சம், அளவுகடந்த ஏகாதிபத்திய ஆசையின் விளைவாக ஏற்பட்டுவிடுகிறது.

எனவே, அப்படி ஒரு முளை கிளம்பாமல் இருப்பதனையே இவர்கள் பெரிதும் விரும்புகிறார்கள்.

இப்படிப்பட்ட விருப்பத்தை அடிப்படையாக வைத்து ஆட்சிபுரிந்த நாடுகள் பல இன்று, அந்தப் பேராபத்தான விருப்பத்தை மாற்றிக்கொண்டாலன்றித் தாங்கள் வாழமுடியாதென்பதனை உணர்ந்து, தங்கள் நோக்கத்தையும் போக்கையும் மாற்றிக்கொண்டுவிட்டன.

ஆனால், இங்கு! சச்சரவுகளை உண்டாக்கி, அந்தச் சச்சரவுகளைச் சிறிது காலம் வளரவிட்டு, அதன் பின்னர், சச்சரவுகளைத் தீர்த்துவைத்துச் சமரசம் கண்டு மகிழ்வதையே தங்கள் ஆட்சியின் நோக்காகக் கொண்டுள்ளனர்.

இதன் விளைவுதான் இப்போது அசாமில் நடைபெற்ற மொழிப்போராட்டமாகும்.

பல இன மக்களையும், பல மொழி பேசுவோரையும் ஒன்றாகப் பிணைத்துவைத்துத் தனக்கு ஆளும் வாய்ப்பினை வசதியாக்கிக்கொண்ட ஆங்கிலேயன் போக்கினையே இப்போது ஆளுவோரும் பின்பற்றிவரும் கொடுமைதான், நாட்டில் பல்வேறுவிதமான சச்சரவுகளையும் போராட்டங்களையும் உண்டாக்கிக்கொண்டு வருகிறது.

இந்தத் தகாத முறை மாறினாலன்றி — மாற்றினாலன்றி நாட்டில் சமாதானமும் நிலைக்காது, சச்சரவும் நீங்காது.

இதனை ஆளவந்தார் உணரவேண்டும் — அல்லது உணர்த்தவேண்டும்.

ஆள்வோர் உணர மறந்ததால் — மறுத்ததால் அசாம் மக்கள் உணர்த்தத் தலைப்பட்டனர். அதனை எப்படியோ சமரசம் செய்திருக்கிறார் உள்நாட்டமைச்சர்.

இந்தச் சமரசத்தை நிலையானதென்று எப்படிக் கூறிவிடமுடியும்!

இன்றில்லாவிட்டாலும், எப்போதாவதொரு நாள்

அந்த மக்களின் உரிமைவேட்கை மீண்டும் தோன்ருது போகும் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

மக்கள் தங்கள் இனவழி பிரிந்து, மொழிவழி ஆட்சி நடத்தும் உரிமை மறுக்கப்படும் வரையில், இப்படிப்பட்ட சச்சரவுகளும், குழப்பங்களும், போராட்டங்களும் நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கும்.

உலகம் ஒப்புக்கொள்ளும் இந்தப் பேருண்மையை ஏற்கமறுக்கும் எந்த ஆட்சியும், வம்பை விலைக்கு வாங்கத் தயாராக இருக்கிறது என்றுதான் பொருள் கொள்வர் நல்லோர்.

உலகுக்குப் பஞ்சசீலம் போதித்து, அதன் வாயிலாகச் சமாதானப் பிரியர் என்ற பெயர் வாங்கப் பாடுபடும் நேரு பண்டிதரின் கீழ் இயங்கும் ஆட்சி, தனது போக்கை மாற்றிக்கொள்ள விரும்பாமல் அடிக்கடி சச்சரவுகள் உண்டாகும் முறையில் தனது ஆட்சியை வைத்திருப்பது விந்தையாகும். "உனக்கல்ல, ஊருக்குத்தான் உபதேசம்'' என்ற முறையில் நடத்தப்படும் ஆட்சி நீண்ட காலத்துக்கு நிலைத்து நிற்காது என்பதனை உணர்த்தத் தேவையில்லை.

அசாம் மொழித் தகராறு சமரசமாக்கப்பட்டதைக் குறித்துத் தலையங்கம் எழுதிய 'சுதேசமித்திரன்' இதழ்கூட,

"......காங்கிரசும் மத்திய சர்க்காரும் இதில் ஒரு முக்கியப் படிப்பினை பெற்றிருக்கலாம். மொழி வெறிக்கு அளவுகடந்து இடம் கொடுப்பது தப்பு, அத்துடன் வலுவான சிறுபான்மையோர் மொழி விஷயத்தில் விளையாடுவதும் இறுதியில் வேதனையே தரும் என்பதையும் அவர்கள் அனுபவத்தில் உணர்ந்திருக்கக் கூடும். தவிர, ஓரிடத்தில் மொழிக் கலவரம் ஏற்பட்டால், இல்லாத இடங்களில்கூட கிளர்ச்சி நடத்த அது ஒரு தூண்டுகோலாகி விடுகிறது. இந்தியை இஷ்டமில்லாத மக்கள்மீது நிர்ப்பந்தமாக அவசரப்பட்டுத் திணிப்பதும் நேர்மையல்லவென்பதை அஸ்ஸாம் சம்பவம்கொண்டும் மத்திய அரசாங்கம் அறியவேண்டும்.''

என்று 8—6—61-ல் குறிப்பிட்டு எச்சரித்திருக்கிறது.

இதனை, சச்சரவுகளை மூட்டிவிட்டுப், பின்னர் சமரசம் காணும் போக்கில் ஆட்சியை அமைத்துக் கொண்டுள்ள டில்லி அரசு உணர்ந்து, தனது போக்கை மாற்றிக்கொள்வது நல்லது.

2-ம் பக்கத் தொடர்ச்சி

திரும்பவும் தம் கையிலிருந்த மல்லிகை மாலையைப் பார்த்தார் அவர். தம்மருகில் மேடைமீது இரு பாங்கிலும் அமர்ந்திருந்த நாலைந்து பேர்களைப் பார்த்தார். அவர்களும் புதியவர்களாகவோ—அல்லது பெரியசிவத்தைப்போல்புதுவேடம் புனைந்து கொண்டுவிட்டவர்களாகவோ இருந்தார்கள். புதியவர்கள் நேற்றுவரை பெரியசிவத்தால் கடுமையான தாக்குதலுக்கு உட்பட்டவர்கள். 'சுரண்டற்காரர்கள்; ஏகாதிபத்தியவாதிகள், தன்னலப் பேய்கள்' என்று அவரால் வருணிக்கப் பட்டவர்கள்.

பெரியசிவம் ஒரு கணம் திகைத்தார். 'இவர்களை ஏற்றிப் போற்றுவதற்காகத்தானே இன்று இந்தக் கூட்டமே நடைபெறுகிறது. இங்கு நான் எப்படி வந்துசேர்ந்தேன்? ஏன் வந்தேன்?—வந்தது இருக்கட்டும். ஏழை பங்காளர், உரிமைக்காகப் பாடுபடும் பெருந்தகையாளர், தன்னலம் சிறிதுமில்லா உண்மைப் பணியாளர் என்றெல்லாம் இவர்களை எப்படி நான் ஏற்றிப் போற்றுவது? — உம், நினைவுப் பிசகாக இங்கு வந்துவிட்டோமா?—சேச்சே! இல்லை, இல்லை. நினைத்து, உத்தேசித்து, விரும்பித்தான் வந்திருக்கிறோம்; திரும்பவும் அவர்களை ஏறிட்டு நோக்கினார் பெரியசிவம்.

அவர் பார்வைமூலம் அவர் உள்ளக்கிடக்கையைப் புரிந்து கொண்டார்கள் புதியவர்கள். அவர்கள் சாடை காட்டினார்கள் கண்ணால்;

"பேசு, பேசு! பயப்படாதே! நாங்களிருக்கிறோம்! நேற்றுவரை சொல்லியதையெல்லாம் இங்கே நினைவில் வைத்துக்கொள்ளாதே! 'நேர்மை, வாய்மை, சொல்தவருமை' இவற்றையெல்லாம் எண்ணிக் கொண்டிருந்தால், இதோ நாங்கள் அடைந்திருக்கும் இந்தப் பெருநிலையை எங்களால் அடைய முடிந்திருக்குமா?—மறந்துவிடு அவற்றையெல்லாம். அப்போதுதான் எங்களைப்போல் நீயும் 'ஓகோ' என்று ஆகலாம். அதிகாரம் பெறலாம். 'நேற்றுவரை அப்படிச் சொன்னாயே, இன்று இப்படிச் சொல்கிறாயே, உனக்கு மூளை இருக்கிறதா?' என்று எவனாவது கேட்டுவிடுவானோ என்று பயப்படாதே! யாரும் முகத்திலறைந்தாற்போல் நேருக்கு நேரே நின்று அப்படிக் கேட்கமாட்டார்கள். அப்படியே யாரேனும் வந்து மனம் கொதித்துப்போய்க் கேட்டாலும் 'அடிக்க வந்தான்; உதைக்க வந்தான்; அதைத் தூக்கி மேலே எறிந்தான்; இதை வாரி இறைத்தான்' என்று அவன்மீது ஒரேயடியாகப் பழியைப் போட்டுவிடலாம்! உம், உம் தயங்காதே! பேசு, பேசு! நாங்கள் இருக்கும்போது உனக்கென்ன பயம்?—மனச்சான்று கொல்லுகின்றதேயென்று எண்ணுகின்றாயா? அந்த மனச்சான்றையே சிறிது நாட்கள் — சிறிது நாட்கள் என்ன, நிரந்தரமாக வேண்டுமானாலும் ஒதுக்கிவைத்துவிடு, பிறகு எந்த இடர்ப்பாடும் வந்து நிற்காது. உன் பாட்டிற்கு 'ஜாம், ஜாம்' என்று உன் விருப்பப்படி எதைவேண்டுமானாலும் ஆரோ கண, அவரோ கணத்தோடு பேசிக்கொண்டே போகலாம். செய்துகொண்டே போகலாம். உம், உம் தயங்காதே!'' என்று அவர்கள் காட்டிய சாடை கூறியது.

அப்போதும் பெரிய சிவத்தின் வாயிலிருந்து பேச்சுப்பிறக்கவில்லை.

மேடையின் மறுபுறம் ஓரக்கண்ணால் பார்த்தார் அவர். அங்கே அவரைப்போல் புதுவேடம் புனைந்து

(15-ம் பக்கம் பார்

காஞ்சீபுரம்

11-6-'61.

தம்பி !

மேயர் முனுசாமி அவர்கள் எழுதிய கடிதம் குறித்துப் பொதுக்கூட்டமொன்றிலே பேசினீர்களே, மேற்கொண்டு விவரம் தரவில்லையே என்று கேட்டிருக்கிறாய். தருகிறேன்.

கீவ் நகரிலுள்ள உக்ரெயின் எனும் விடுதியிலிருந்து, கடிதம் எழுதியிருக்கிறார் மேயர். 16—5—61 மாலை லெனின்கிராடு நகர் சென்றாராம்; விமான நிலையத்தில் நகர சோவியத் பிரதிநிதிகள்—அதிகாரிகள்—வரவேற்று, நகர சோவியத்தின் பிரதிநிதியாக ஏற்று எல்லா வசதிகளையும் செய்தனர் என்று குறிப்பிட்டுள்ளார்.

"நகரத்தின் சிறப்பிற்குரிய பல இடங்களைச் சென்று பார்த்தேன். யுத்தத்தினால் நாசமடைந்த நகரம் இவ்வளவு குறுகிய காலத்தில் மாற்றியமைத்து இருப்பது பெருமைக்குரிய விஷயம்"—என்று கடிதத்திலே மேயர் தெரிவித்திருக்கிறார்.

மற்றப்படி, நமது விடுதலை இயக்கம் குறித்துத் தகவல் அறிய விரும்புவோர்களிடம் உரையாடும் வாய்ப்பும், மேயருக்குக் கிடைத்திருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்தவர், சென்னை மாநகராட்சியின் முதல்வராகி, சோவியத் சென்று உலாவருவதும், பல தலைவர்களுடன் உரையாடுவதும், நமக்கெல்லாம், மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. ஆமாம்! இங்கு, நம்முடன் இருந்தவர்களிலே சிலர், 'திராவிடம்' என்று கூறுவது தங்கள் 'எதிர்காலத்தை'த் தீய்த்துவிடும் என்று எண்ணம்கொண்டு ஏதேதோ பேசிக்கொண்டிருக்கும் நேரத்தில், திராவிடநாடு பற்றியும் திராவிட முன்னேற்றக் கழகம் குறித்தும் அந்தக் கழகத்தின் துணையினால், 'மேயர்' எனும் நிலைபெற்ற ஒருவர், சோவியத்திலே எடுத்துரைப்பதறிந்து நமது நெஞ்சம் நெக்குருகத்தான் செய்யும்.

மேயரவர்கள், தமக்கு இத்தகைய நிலை கிடைத்தது, திராவிட முன்னேற்றக் கழகத்தினால்தான் என்பதையும், நன்றியறிதலுடன் குறிப்பிட்டுள்ளார்.

"உன்னாலா, நான் உயர்ந்தேன்!"—என்று கேட்டிடும் உயர்ந்த பண்பினரையும் பார்க்கிறோம்—ஏற்றம் பெறுவதற்குக் காரணமாக இருந்த கழகத்துக்கு நன்றி காட்டத் தவறாமல், நன்றி மறக்கவில்லை, என்று கூறிடும் மேயரையும் காண்கிறோம். உலகம் பலவிதம்!!

பொதுவாக 'இந்தியா' பற்றி, சோவியத் மக்கள் தெரிந்துகொண்டிருக்கும் அளவுக்கு, 'திராவிடம்' குறித்து அறிந்துகொண்டில்லை — நான் கூறுவதை ஆவலாகக் கேட்கிறார்கள் என்று மேயர் தெரிவித்திருக்கிறார்.

★ அம்பும் ஏணியும்

அ

உண்மைதான்! இந்தப் பதினைன்காண்டு, காங்கிர சாட்சி, 'இந்தியா'—'இந்தியர்'—'இந்தியப் பேரரசு'—எனும் கருத்துகளை உலகிலே, பரப்பியிருக்கிறது—திட்டமிட்டு, பெரும்பொருள் செலவிட்டு. அதுமட்டுமல்ல, 'திராவிடநாடு' என்பதுபற்றிய விவரத்தை, மற்றவர்கள் உலகுக்குத் தெரிவிக்கும் வாய்ப்பினை, பெறுவதும் எளிதில் நடைபெறக்கூடியதல்ல. எனவே சோவியத்திலே, திராவிடநாடு பற்றி அதிகம் தெரிந்திருக்கவில்லை என்பதிலே, வியப்பில்லை.

திராவிடத்திலேயே திராவிடத்தைப்பற்றித் தெரிந்துகொள்ளாமலிருக்கிறார்களே — இன்னமும் — சில பலர்! இஃதன்றோ வியப்பு!

அதனினும் வியப்பு, திராவிடம் என்றால் என்ன தெரியுமா என்று விளக்கம் அளித்து வந்தவர்களிலேயே சிலர், திருப்பி, நம்மைக் கேட்கிறார்களே, திராவிடம் என்றால் என்ன? அதன் எல்லை யாது? என்றெல்லாம், அதுதான்!!

திராவிடம் என்பதற்கு விளக்கம் இல்லை—எல்லை இல்லை — அதிலே உண்மையும் இல்லை — என்று முன்பு கூறிய பலரைச் சாடிய நாவினர், இன்று தமது 'திறமையை' திராவிடம் என்றொன்று இல்லை என்று பேசுதற்குப் பயன்படுத்துவது, விந்தையினும் விந்தை!!

திராவிடநாடு என்பது கைகூட முடியாத ஒன்று என்று முன்பு ஆளும் கட்சியினரும் வேறு இலட்சியம் கொண்டோரும் கூறியபோது, அளித்த மறுப்புரைகள்—தெளிவுரைகள் — விளக்கஉரைகள் — முழக்கங்கள்—யாவும் வெறும் ஓசையோ!! அங்ஙனம் கூறிக்கொள்ள, அவர்கட்கே வெட்கமாக இருக்குமன்றோ!

திராவிடம் என்பதற்கு விளக்கமும், அது கைகூடத்தக்கதுதான் என்பதற்கு ஆதாரமும் தரச்சொல்லி, முன்பு சிலபலர் கேட்ட காலை, அள்ளித்தந்த, வாரிவீசிய, எடுத்துரைத்தவைகள் அத்தனையும் சொத்தையோ! மெத்தக் கஷ்டப்பட்டு, இத்தனை ஆண்டுகளும், 'சொத்தை'களையா, இவர்கள், பேசி வந்தனர்! என்ன பரிதாபம்! என்ன பரிதாபம்!!

அல்லது, அவை இன்று சொத்தை — அன்று அல்ல!!—என்பது வாதமோ!!

எமக்கு அப்போதும் உள்ளூரத் தெரியும், திராவிடம் என்பது அபத்தம் என்று — என்றாலும், கூறிக்கொண்டிருந்தோம் — இப்போது எமது மனம் இடம் தரவில்லை—எனவே உண்மையை உரைத்திடும் உறுதியையும் ஆற்றல்மிகு அஞ்சாமையையும் துணைக்கழைத்துக்கொண்டு, இப்போது பேசுகிறோம் என்றுரைக்கின்றனர்.

இதுகேட்டு, மனமகிழ்ச்சியை வெளியிடும் தாள்களும், காங்கிரசாரும், உள்ளூர என்ன எண்ணிக்கொள்வார்கள்—என்னே அறிவின் மேம்பாடு! எத்துணை சிறப்புமிக்க ஆராய்ச்சித்திறன்! அஞ்சாநெஞ்சின் அருமைதான் என்னே! திராவிடம் என்பது கற்பனை என்று, கண்டறிந்து, காரணம் பல தேடிப்பெற்றுத், துணிவுடன், பேசுகின்றனரே, தூயவர்கள், என்று வியந்து பாராட்டுவர்! இல்லையே! இயலாதே! முறையுமாகாதே!! மூச்சைப்பிடித்துக்கொண்டு, முரசுபோல் ஒலிக்கவேண்டும், வெண்கலநாதம் கிளம்பவேண்டும், மாற்றார் மருளத்தக்க இடியொலி எழவேண்டும் என்ற நினைப்புடன், நரம்புகள் புடைத்திட, இரத்தம் சூடேறிட திராவிடம்! திராவிடம்! என்று இவர்கள் பேசியபோது, எவ்வளவு பக்குவமாக, கனிவுடன், தெளிவளிக்கும் முறையில், திராவிடம் என்பது கற்பனை என்று கூறினோம்—அதற்காகப் பல ஆதாரங்களைக் காட்டினோம்—அத்தனையையும், தூக்கி எறிந்துவிட்டுத், துச்சமென் போம் உமது இச்சகப்பேச்சை! தூள்தூளாக்குவோம் உமது வாதத்தொகுப்பை!—என்றெல்லாம் பேசி, நமை இழிமொழி பலகூறி ஏசி, நின்றவர்கள், தெளிவுபெற, அறிவுபெற, இத்தனை ஆண்டுகள் ஆயின! இப்போதல்லவா, நாம் அப்போது கூறியவற்றை, இவர்கள் கூறுகின்றனர். அதிலும், ஏதோ, இவர்கள் மெத்தக் கஷ்டப்பட்டு, ஐயந்திரிபற நூற்களைப்படித்து, உட்பொருள் விளங்கத்தக்க முறையில் ஆராய்ச்சிகள் நடாத்தி, புதிய, பொலிவும் வலிவும்மிக்க உண்மைகளைக் கண்டறிந்து, முதன்முறையாக எடுத்துக் கூறிடுவதுபோலப் பேசுகிறார்களே — நாம் கொடுத்த அடியால் சுருண்டு கீழேவிழுந்தவர்கள், மீசையில் மண்ஒட்டவில்லை என்று பேசும் முறையில், இவர்களே, திராவிடம் கற்பனை என்பதின் 'கண்டுபிடிப்பாளர்'போலக் கோலம்காட்டிக் குரலெழுப்பி வருகிறார்களே! நாம் கொடுத்ததைக் கொண்டார்கள்! கொண்டதைக் கொட்டுகிறார்கள்! இதிலே ஒரு 'கித்தாப்பும்' தேடுகிறார்களே—என்றுதான் எள்ளி நகையாடுவார்களேயன்றி, போற்றவா செய்வார்கள்.

பழைய சோறு! பழைய சோறு! சுடச்சுடப் பழைய சோறு! பானை அறுவது காசு! கலயம் இருவது காசு! கையளவு ஐந்தே காசு!—என்று கூவி விற்பவனை என்னென்பர்! குறைமதியோ, குறும்போ, என்பர்!!

திராவிடநாடுபற்றி வாதாடிப் போராடி வந்தவர்கள், திராவிடநாடு கற்பனை என்றுரைக்கக் காட்டும் காரணம் சுடச்சுடப் பழைய சோறு! என்பதன்றி வேறென்னவாக இருக்கமுடியும்!

உனது திருநாடதனை விடுவிக்க எழுக! இன்றே!

உலகிலே பான்மைகெட்டு உழலுவது அழகலவே!!

கொத்தடிமை செய்யாது கொடிகட்டி வாழ்ந்தார்கள் உனது முன்னோர்! குவலயத்தார் பெருமை தந்தார் அதனைக்கண்டு!

ஆண்ட இனம் நாமலவோ? அச்சம் ஏனோ? ஆருயிரை இழப்பதேனும், அருமைமிகு திருவிடத்தை அமைப்போம்; காப்போம்!

அகிலொடு சந்தனமிகு அடல்கொண்ட மலைநாட!
ஆழ்கடலின் முத்தெடுத்து அகிலத்துக்கனுப்பியோனே!
நாமணக்கும் பாமலிந்த நாட்டின் நல்லோய்!
பூமணக்கும் பொழில் சூழ்ந்த பொன்னி நாட!
புகழ்மணக்கப் பெற்றிடுவோம் புதுமை வாழ்வு!
புறப்படுவாய்! போரிடுவாய்! வெல்வாய்!!

தம்பி! நமதுகழகம் எழுப்பிய இந்தப் பண் கேட்டுப் பல இலட்சக்கணக்கானோர் புனிதப் பயணத்தில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டுள்ளனர். குழலியின் மழலையும், யாழின் இனிமையும், பொருளின் மயக்கமும், வாழ்வின் சுவையும் அந்தத் தூயவர்களின் பணியினை மாய்த்திட இயலவில்லை. காற்றினிலே கலந்ததோர் இசையைக் கேட்டுக் களிப்புற்று மெய்மறந்து கிளம்பும் திசைநோக்கிச் செல்வார்போலே, இன்பத்திராவிடம் காண நடக்கின்றார், வீரரெல்லாம். அவர் தமக்கு துந்துபியாய், சங்கொலியாய், இருந்தபேர்கள், இன்று, வேறு ஒலி எழுப்பி நின்றால், கைகொட்டிச் சிரிப்பதன்றி, கடமையையும் மறப்பரோ, கழகத்தோழர்!!

அன்று நீர் ஆற்றிய உரைகளெல்லாம், மறந்தீரோ? மறப்போமோ? மறத்தல் நன்றோ!—என்று கேட்டிடும் தோழர்க்கு, இழிமொழியும் பழியும்தானோ, இவர்கள் தரும் பதிலுரை!

உதட்டோசை! உள்ளத்தின் இசை அஃதல்ல! திராவிடம்! திராவிடமென்று பேசி நின்றோம்—உள்ளத்தில் அதனை நாங்கள் கொண்டோமில்லை!!—என்று கூறிடும் விந்தை மனிதரை, எந்த நாட்டிலும், மதித்தவர் இல்லை!

'உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்' என்பது உத்தமரின் வாக்காகும்.

உத்தமரின் அந்த மொழி பொய்த்திடாது.

அன்று நாம் பேசியது அத்தனையும் பொய்யேயன்றி, அணுவளவும் உண்மையில்லை! அறிவிக்கின்றோம்!!—என்று இன்று அறைகின்றார், மாறியோர்கள்! நன்று! நன்று!! ஆனால் ஒன்று! இன்றுமட்டும், உள்ளத்தில் ஒன்றும் உதட்டில் வேறொன்றும் இல்லை என்று எதைக்கொண்டு நம்புவதோ!

இடித்துப் பேசும்முறை கேட்டா!

தடித்த சொற்கள் வீசக் கண்டா!!

வடித்தெடுத்த பொய்யுரையும் விலையாகும் என்று வாணிபம் நடாத்திடும் திறமை கண்டா!!

எதைக் கொண்டு நம்புவது, இன்று இவர் பேசுவதே, உள்ளத்துள் உள்ளது என்று.

பல்லாண்டாக, உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசி வந்தோம், பெரும் பிழையே பொறுத்திடுவீர், என்று பேசும் பெரியோர்கள், இன்னும் ஓர் ஈராண்டு சென்ற பின்னர், இன்று கூறிடுவது அனைத்தும் தவறய்யா, தவறு! மனமருளின் விளைவு! மாச்சரியம் பெற்றெடுத்தநச்சரவு! என்றுரைக்கமாட்டார்கள் என்பதற்கு, உறுதி யாதோ? எவரே இவருரையில் உறைவது உண்மை என்று கூறவல்லார்! இவர்தான், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசிடும் வித்தைதனில் வித்தகராய் இருக்கின்றாரே!

பிடிபட்ட கள்வனிடம் பெரும் பொருளை ஒப்படைப்பார் தாமுமுண்டோ? பேதையரோ, மக்கள் தாமும்! பெரும் பிழைகள் பொறுத்திடுவார் எனினும், ஒன்று, உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசிடுவார் உறவு கொள்ளமாட்டார்! உண்மையிது! உணர்வார் திண்ணம்!!

திராவிடநாடு எனும் திட்டத்தை, எதிர்த்திட, மறுத்திட, காரணம் தேடி அலுத்து, கிடைத்திடாததால், காங்கிரஸ் கட்சியினர், கைபிசைந்து, கண் கசக்கி ஓய்ந்து உட்கார்ந்துவிட்டதுபோலவும், திராவிடநாடு எனும் திட்டத்தை எதிர்த்திட, தக்க காரணங்களை, நூலகமெல்லாம் சென்று கற்று, நுண்ணறிவால் உணர்ந்து, நாத்திறனால் நவில்வார்போல, மாறியோர் இன்று பேசுவது, உள்ளபடி விந்தையினும் விந்தையன்றோ!

அதனினும் விந்தையன்றோ, அவர் பேசும் உரையினாலே அழிந்திடும் திராவிடம் என்று, அதே உரையினை ஆண்டுபல பேசிப்பார்த்தும், பலன்காணமுடியாத காங்கிரசார் கொண்டிடும் எண்ணம்!

புட்டுப்புட்டுச் சொன்ன பிறகு, ஒரு முறைக்குப் பலமுறை சொன்னபிறகே, மந்தமதிபடைத்த, என் மாணவனுக்கு, பாடம் தெரிந்தது, என்று ஆசிரியர் கூறலாம்—பெருமிதத்துடன்—உரிமையுடன்.

நன் மாணவனாக இருப்பின், "ஆமய்யா, ஆம்! ஆசிரியர் சொன்னபோது, எனக்குப் புரியவுமில்லை! பிடிக்கவுமில்லை! ஆனால், விடாமல், அவர், பக்குவமாகப் பாடம் போதித்தார்—பிறகே எனக்குப் புரிந்தது! என் ஆசிரியரின் அருந்திறனால், நான் பாடம் பெற்றேன், என்று மகிழ்ந்து கூறி, ஆசிரியருக்கு நன்றி தெரிவிப்பது முறை.

ஆசிரியர், தெளிவுபெற்ற, அறிவுபெற்ற, மாண வனை, தன் திறமையின் விளைவு என்று ஊருக்கு, உல குக்குக் காட்டுவது இயற்கை.

திருந்திய மாணவனுக்கு மேலும் உற்சாகமூட்ட எண்ணிடும் இயல்பினராக ஆசிரியர் இருப்பரேல், திருந் திய மாணவரைச் சட்டாம்பிள்ளையாக்கிடக்கூடும்!

ஆனல், பலஆண்டுகள் மிகுந்த கஷ்டப்பட்டுப் பல முறை, பக்குவமாகப் பாடம் போதித்துப் போதித்து, பாடத்தைப் புரிந்துகொள்ளும் நிலையை ஒரு மாணவ னுக்கு ஓர் ஆசிரியர் ஏற்படுத்தியான பிறகு, நன்றி காட்டுவதற்குப் பதிலாக, பெருமை அளிப்பதற்குப் பதிலாக, அதே மாணவர், தான் ஆசிரியரிடமிருந்து கற்ற அதே பாடத்தை, ஆசிரியரையே தன் மாணவர் என்று கருதிக்கொள்ளும் மமதை மிகுந்த நிலையில், அவருக்கும் சேர்த்துத் தருகிறேன், புதிய பாடம் என்று, வகுப்பறையில் பேசுதல் போலன்றோ இருக்கிறது, மாறி னோர் நீண்டகாலமாகவே திராவிடத்தை எதிர்த்துவந்த காங்கிரசாருக்கும் சேர்த்து, "திராவிடம் தீது! பலிக் காது!"—என்று பாடம் புகட்டுவது!!

மாறினோர், திராவிடநாடு இலட்சியத்தைத் தாக்கிப் பேசுவதற்குக் காங்கிரஸ் கட்சி மேடைகளும் ஏடுகளும் இன்று அளிக்கும் வரவேற்புக் கண்டு, ஆசிரியரை மாணவராக்கிக்கொண்ட (பலகாலும் கேட்ட பிறகே பக்குவம் பெற்ற) மாணவன் போன்ற நிலைகொண்டு நடமாடுகின்றனர் மாறினோர். உண்மை என்னவென் றால், 'தம் சரக்கைக் கூவி விற்கும் தரமான ஏஜண்டு கிடைத்துவிட்டார்—அவருக்கு இனிப்பளிக்கத் தந்திடுவோம் விளம்பரம் என்று, காங்கிரசார் எண்ணுகின்றார்! எவரே இதனை அறியார்!! மாறினோர், திராவிடம் என்பது கற்பனை என்பதுபற்றிப் பேசவேண்டியதனைப் பேசி, முன்னாள் தோழர்கள்மீது பகைகக்கி, பழி சுமத்தி, இழிவு வீசிடும் கட்டம் முடியுமட்டும், புன்னகை பூத்த முகத்தினராய் இருப்பர், காங்கிரசார்! பிறகோர் நாள், கேட்பர்; "என்னப்பா! இன்று நீ, சொல்வதெல்லாம், முன்பு நாங்கள் சொன்னதே, என்பதை, நாடு அறியு மப்பா!!" — என்று. அன்று, அவர்கள் சிரிப்பர்! இவர்கள் சிந்திப்பர்!!

சோப்பு விளம்பரக் கடையிலே, சொகுசான சுந் தரியின் படத்தை, எடுப்பாகத் தொங்கவிட்டிருப்பது, எதற்காக? அந்த ஆரணங்கின் அழகுக்கு மதிப் பளித்தா! அல்ல! அல்ல! அந்தப் பாவை, தமது சரக்கு மிக நல்லதென்று கூறுவது காரணம்!!

அஃதேபோல, திராவிடத்தைத் தாக்குவோர் எவ ரேனும், அவரைத் தூக்கிவிடல், காங்கிரசுக்கு, தன் காரியத்தைச் சாதித்துக்கொள்ளும், வேலை முறையிலே ஒன்று.

எமக்கு இவர் அம்பு! — என்பது காங்கிரசாரின் எண்ணம்.

எமக்கு இவர் ஏணி என்பது மாறினோரின் எண்ணம்.

எமக்கு இது புதிது அல்ல! இத்தகைய 'சேர்க்கை'யை முன்பும் கண்டிருக்கிறோம். கூடாநட்புக் கேடாய்முடியும் என் பதும், எமக்குத் தெரியும் என்பது கழகத்தவரின், ஆய்வுரை.

தம்பி! கூண்டிலே நிறுத்தப்பட்டுப், பாகிஸ்தா னுடன் கூடி, இந்தியாவுக்கு எதிராகச் சதிசெய்யமுனைந் தார் என்று குற்றம் சாட்டப்பட்டு, குமுறிக்கிடக்கும், ஷேக் அப்துல்லாவைத் தெரியுமல்லவா—ஷேரே காஷ்மீர் ஜிந்தாபாத்—காஷ்மீரப் புலி வாழ்க!—என்று, காங்கிரஸ் முகாமே, முன்பு முழக்கமிட்டது! பாகிஸ்தானைக் கண் டிக்க, ஜனுப்ஜின்னவைத் தாக்க, பிரிவினைச் சக்திகளை ஒடுக்க, ஷேக் அப்துல்லா தேவைப்பட்டார்! எந்தக் காங் கிரஸ் மாநாட்டிலும் காஷ்மீரத்துத் தீரரைக் காணலாம்! அந்த வீரரின் முழக்கத்தைக் கேட்கலாம்! நேரு பெரு மானின் பக்கத்திலேயேதான், ஷேக் அப்துல்லா அமரு வார்! நேருவின் படத்தை வெளியிடும் அளவிலும் முறையிலும், ஷேக் அப்துல்லாவின் படத்தை இதழ்கள் வெளியிட்டன! இன்று? கூண்டில்! குற்றவாளியாக!! தீர்ப்பு என்னவோ என்ற நிலையில்!! ஏன்? எமக்கு அம்பு! என்று காங்கிரஸ்கட்சி — எனக்கு ஏணி என்று ஷேக் அப்துல்லா,—ஒருவர்பற்றி மற்றவர் போட்ட கணக்கின் விளைவு!

காங்கிரஸ் கட்சியிலும் 'பரிபூரண சரணுகதி' அடைந்தாலொழியத்தூக்கிவிடுகிர்களே என்றுஎண்ணி மகிழ்ச்சி கொள்கின்றவர்களைச், சமயம்பார்த்து, அவர் கள் துளி ஏறுமாருகப் போவார்கள் என்று தெரிந்ததும் தூக்கி எறிந்துவிடக், காங்கிரஸ் தயங்காது—காங்கிர சுக்கு அதிலே பழக்கமும் உண்டு—திறமையும் மிகுதி.

காஞ்சி
ஜூன் 17, 18.

எடுத்துச் சொல்ல வேண்டியவை ஏராளம்

நாட்டுக்கு நாம் எடுத்துச்சொல்ல வேண்டியவைகள் ஏராளமாக உள்ளன.

எதிர்ப்புரைப்போர்,
ஏசிப்பேசுவோர்,
பழித்துரைப்போர்

ஆகியோரை மறந்து பிரச்சினைகளில் நாட்டம் கொள்ளவேண்டும்.

பிரச்சினைகளோ, பலப்பல—

அவைகளை விளக்கும் முறை களைப்பற்றிக் கலந்துரையாட வேண்டும்

அதற்கே கூடுகிறோம்

—அண்ணுதுரை.

அந்த ஆபத்து ஏற்படாமலிருக்க வேண்டுமானுல் ஒரே அடியாகக் காங்கிரசின் அடிபணிந்தாகவேண்டும்.

தேசிய 'பாரம்பரியம்' மறவேன் என்கிருர் ம. பொ. சி.

இன்று பெரிய இடத்தில் அமர்ந்துவிட்ட காங்கிரஸ் தலைவர்கள் சிலரைவிடச் சிறைக் கொடுமையை அதிக அளவு ஏற்றுக்கொண்டவர், ம. பொ. சி.

அவர், பிரிவினைச் சக்திகளை—குறிப்பாகத், திராவிட இயக்கத்தை—எதிர்க்க முனையும்போது, அவரைச் சிலம் புச் செல்வர் என்றும், செந்தமிழ்க் காவலர் என்றும் சிறைக்கஞ்சாச் சீலரென்றும் புகழாரம் சூட்டும் காங் கிரஸ் தலைவர்கள், அதே ம. பொ. சி, தமிழரின் உரி மைக்காக — (அந்த உரிமையும் இந்திய ஒற்றுமைக்கு ஊறு தேடாத முறையில்) போராடக் கிளம்பும்போது, எத்துணை கேவலமாக, எடுத்தேன் கவிழ்த்தேன் என்று, ஏசுகிருர்கள், என்பதை நாடு காணவில்லையா!!

ம. பொ. சி. அவர்களுக்கும் காங்கிரஸ் கட்சிக்கும். அடிப்படையில் கருத்து ஒற்றுமை இருப்பது மட்டு மல்ல, கூடிப் பணியாற்றியதால் ஏற்பட்ட, தோழமை யும் நிரம்ப இருக்கிறது. அவருக்கே இது!! கதர் ஆடைப் பிரச்சினையிலேயிருந்து, கல்லூரியில் போதனு மொழியாகத் தமிழ் இருக்கலாமா கூடாதா என்பது வரையில், காங்கிரஸ் கட்சிக்கும், மாறினோர்க்கும் கருத்து ஒற்றுமை கிடையாது. இந்நிலையில், ஓர் போலி நேசம்! எப்படி அது, பொதுமக்களால் மதிக் கப்பட முடியும்! மக்கள் என்ன, சிந்திக்கும் திறனே அற்றவர்களா!!

காங்கிரசின் துணைகொண்டு, மளமளவென்று வளர்ந்துவிட்டால், பிறகு அவர்களையும் ஒரு கை பார்த் துக்கொள்ளலாம் என்று இவர்களும், ஆனுனப்பட்டது களெல்லாம் அடிபட்டுப் போய்விட்டன, இவர்கள் வளர்ந்து நம்மை என்ன செய்துவிட முடியும், தி. மு. கழகத்தை எதிர்க்க ஒரு பட்டாளமாக இவர்கள் வேலை செய்கிற வரையில், 'கொட்டை எழுத்தை'ச் சம்பள மாகக் கொடுப்போம்; நம்மிடம் அவர்கள் தமது நாவரி சையைக் காட்டினுல், ஒரே அடியாக ஒழித்துக் கட்டி விடுவோம் என்று காங்கிரசும் எண்ணிக்கொண்டு, நடவடிக்கையிலே ஈடுபடுகின்றது என்பதை நாடு அறிந்துகொள்ளவா இல்லை! நன்ருகத் தெரியும், இந்த நிலைமை.

இந்த நிலைமையை நன்கு உணர்ந்த, தி. மு. கழகத் தோழர்கள் சிலரைக்கொண்டு, நமது இலட்சியத்தைச் சிதைத்துவிடலாம் என்று எண்ணும் காங்கிரசாரின் திட்டத்தை நன்கு அறிந்துகொண்டதால், முன்னிலும் விறுவிறுப்பாகப் பணியாற்றி வருகின்றனர்; திராவிட நாடு தனிநாடு ஆகவேண்டும் என்பதற்கான, எழுச்சி மிகு கொள்கையை எடுத்துரைத்துவருவதிலே, புதிய தோர் உற்சாகம் காட்டுகின்றனர். புதுப்புதுக் கிளைகள் எங்கெங்கும்!! உறுப்பினர்களின் எண்ணிக்கை வளர்ந்த வண்ணம்; அதுமட்டுமல்ல! திராவிடநாடு அமைந்தாகவேண்டும் என்பதற்கு ஆதரவு தரும் சான்றுகள், வரலாறு இலக்கியம், என்பவைகளைப்பற்றி நாட்டவர் உணரத்தக்க வகையில் எடுத்துரைத்தோம்; மறுப்புரைப்போர் ஓய்ந்தேபோனுர்; என்று இருந்த நிலைமையினை இன்று சிலர் கெடுக்க முனைவதாலே, மீண்டும், கொள்கையினை எடுத்துரைப்போம், என்ற ஆர்வத்துடன் பணியாற்றக் கிளம்பியுள்ளனர்.

பத்திரிகைகளின் இருட்டடிப்பை, அவர்கள் பொருட்படுத்தவில்லை; தமது பணி, பலன் அளித்து வருவதைக் கண்கூடாகக் காண்பதனுல்.

பொய்யுரைகள் பேசப்படுகின்றன; பொருட் படுத்துவதில்லை; கெட்டிக்காரன் புளுகே எட்டே நாள் தான் என்கிறபோது, கோபம் கொண்டோர் இட்டுக் கட்டுவது அத்தனைநாள்கூடத் தாங்காது என்பதனை அறிந்திருப்பதால்.

மாறினோர், விலகுவதற்கு 48 மணி நேரத்துக்கு முன் னுல் வரையில், 'திராவிடநாடு' பிரச்சினையிலே, தமக்கு மாறுபாடான எண்ணமே கிடையாது என்று மார்தட்டிக் கூறிவிட்டு, இப்போது நாங்கள், திராவிடநாடு கூடாது என்று, வாதாடினுேம், போராடினுேம் பல ஆண்டுகளாகவே என்று இன்று பேசுவது கேட்டு, கோபம்கூட அல்ல, சிரிப்புத் தான் வருகிறது.

துவக்கத்திலே, தம்பி! எனக்கு இலேசாக ஒரு ஆசை, உள்ளூர இருந்தது.

நம்மை — அதாவது என்னை என்று வைத்துக் கொள்ளேன்—பிடிக்காததால், 'திராவிடநாடு' திட்டம் வேண்டாமென்று கூறுவார்கள், ஆனுல், தனிஅரசு வேண்டும் என்றுதான் கொள்கை இருக்கும், திராவிட நாடு என்பதற்குப் பதிலாக, தமிழ்நாடு என்று திட்டம் கொள்வார்கள் என்று எண்ணினேன்.

அதாவது, தனி அரசு அமைக்கத்தான் அவர் களும் பாடுபடுவார்கள், ஆனுல், அளவிலேதான், மாறு பாடு இருக்கும், என்று எண்ணினேன்.

அளவுபற்றி மட்டுமே, கருத்து வேற்றுமை என் ருல், அது அருவருக்கத்தக்கதுமல்ல, ஆபத்தானது மல்ல, என்பது என் எண்ணம் என்பதை, தமிழ்நாடா? திராவிட நாடா? என்று கேள்விகள் கேட்கப்படும் போதெல்லாம், ஒரணுவில் காலணு இருக்கிறது, திரா விடநாட்டில் தமிழ்நாடு இருக்கிறது என்று நான் பதி லளித்து வந்ததிலிருந்து நாடு தெரிந்துகொண்டிருக் கிறது.

அமையவேண்டியது தனி அரசு!

பெறவேண்டியது முழு உரிமை!

ஒழிக்கப்படவேண்டியது வடநாட்டு ஏகாதிபத்தியம்!

விலகவேண்டியது டில்லிப் பேரரசின் பிடியில் இருந்து!

எனவேதான், தமிழ்நாடு என்று அளவு வகை யிலே, நம்மிலிருந்து மாறுபட்டிருந்தாலும், தனி அரசு, முழு உரிமை, வடநாட்டு ஏகாதிபத்திய ஒழிப்பு, டில்லிப் பேரரசிலிருந்து விடுபடுவது, என்ற கருத்துகளிலே,

(11-ம் பக்கம் பார்க்க)

கவிதை அல்ல!]

மூதறிஞர் மூவர்

[ஆக்கிக் கொள்ளலாம்.

மூவர்கிளம்பினர் மூதூர்விட்டு
வேறூர்சென்று வாழ்ந்திட எண்ணி;
முறையாய் மருத்துவம் ஆரூடமொடு
இசையுங் கற்றுத் தேறியிருந்தும்
எவரும் சீந்தா நிலையே ஈங்கு,
எனவே ஏகுவோம் இனிதாய் வேற்றிடம்
என்றே சென்றனர், மூவரும் ஒன்றாய்.

*

வழிநடந்த களைப்புவந்து அவரை வாட்டுமுன்
வழியில்பட்ட சிற்றூரொன்று சிந்தை ஈர்த்தது
விழுந்தும் வீழா நிலையிலுள்ள பழையசாவடி
இருந்துசமைத்து உண்ண எண்ணித்திட்டமிட்டனர்.

*

கடைசென்றுகச்சிதமாய்கறிகாய்வாங்குவேனென்று
மருத்துவம்கற்றவன், மன்னன்,
சொன்னான் சென்றான்.

*

அரிசிக்கு நான் செல்வேனென்று ஆரூடத்தான்
'அடுப்புமூட்டிக் காத்திருப்பேன்' —
அறிவித்தான் இசைகற்றோன்
இவ்விதமே மூவரும்தான் முத்தொழிலை
மேற்கொண்டார்.

*

"கத்தரிக்காய்! விலைமலிவு!" என்றான் கடைக்காரன்.
மெத்தச் சூடலவோ, வயிறும் வலிக்குமென்றான்.
வெண்டை சளியூட்டும் உருளை உடல்ஊதும்
கருணை நல்லதுதான் என்றாலும் கடும்வாய்வு
என்றே ஒவ்வொன்றும் ஒவ்வோர் நோயூட்டுமெனும்
மருத்துவத்தை உரைத்தான்,
மதித்தெதையும்கொள்ளாது.

*

இந்நிலையதனில் இவனிருக்க,
அரிசி கொளச்சென்ற ஆரூடக்காரனவன்
குறுக்கே ஓர்பூனை ஓடியதால் திகில்கொண்டு
குந்திக்கிடந்தான் ஓர் திண்ணையிலே
ஆரூடம்கூறும் அரைநாழிகை வரையிலே
அப்பா! இனித்தோஷம் இல்லை என்றேகுகையில்,
ஐயர்குறுக்கிட்டார்! ஔவையும் தும்மிவிட்டாள்!
அடுக்கடுக்காய் அபசகுணம்—ஆபத்து வந்ததனால்
அரிசிவாங்கும் 'ராசி' அந்திசாயும் போதினில்தான்,
என்ற கணக்கெடுத்தான் ஆரூடம்தனைக்கற்றோன்.
எனவே அயர்ந்து படுத்திருந்தான் அரசமரத்தடியில்.

*

இங்கோ இசைகற்றோன், ஈரமிலாவிறகெடுத்து
எரியவிட்டு, அடுப்புமீது ஏற்றினான் பானையதை
தண்ணீர் அதிலிட்டான்;
தழல்பிடித்துக்கொண்டதுகாண்.
தளதள தத்தளவென்றே தாளம்போடுதல்போல்
கொதியெழுப்பிக் காட்டிற்று பானையுள்
தண்ணீரும்

*

சரியான சமயமிது சங்கீதம் பயிலஎன்று
சமயலில் ஈடுபட்ட இசையாளன் முடிவுசெய்து
பாட்டைத் துவக்கிவிட்டான் பானை தாளமிட
தளதள தத்தளவென்ற தாளம் துணை கொண்டான்.
பாடல் பரவசத்தில் ஈடுபட்டான் பரிவாக.

*

தாளம் போட்டிடவா பானைக்குத்தான் தெரியும்!
தண்ணீர் கொதிப்பு மாறி தாளமும் வேறாயிற்று!
தப்பாகத் தாளமிட்டுச் சங்கீதம் சொல்லாதே!
சொன்னேன், நான் முன்கோபி, சொகுசாகப்
பாடுகிறேன்.
என்பாட்டுக் கேற்றபடி இசைந்து தாளமிடு
இல்லையேல், இசையாணை, இருக்கவிடேன்
உன்னை என்றான்.
பானைக் கென்னதெரியும் பாட்டும் தாளமும்தான்
தளதளவெனும் ஓசை தவறாகிப் போயிற்று
முறைத்தான், முணுமுணுத்தான், மும்முறையும்
எச்சரித்தான்
பானைக் கென்னதெரியும் பாடுவோன் கடுங்கோபம்
தன்னிச்சையாக ஓர் தாளம் எழுப்பிற்று
தடிதூக்கி அடிகொடுத்தான், 'தப்புத் தாளம்
போட்டு,
இசை கெடுக்கும் போக்கிரியே! இந்தா தண்டனை"
என்று.
பானை தூளாகி; தண்ணீர் நெருப்பணைக்க
சமயலுக்கு வழியில்லை! கண்டான் சங்கீதன்!

*

காயின்றிக் கறியின்றி காரணங்கள்தான் சுமந்து
வந்து சேர்ந்தான் மருத்துவனும், வாகடம்
பிழைத்ததென்று

*

அரிசிக் கடைக்காரன் பேர் ராசி என்னுடைய
ராசியுடன் ஒன்றுசேராக் காரணம் தன்னுலே
வாங்கி வரவில்லை அரிசிதானும்! வேறு கடையும்
இங்கில்லை
ஆரூடம் பொய்க்காது! ஆருண்டுப் பாடம்
என்ருன்.
ஆரூடம் கற்றதனுல் அரிசி வாங்காதிருந்தேன்!

மூவரும் மும்முறையில் மூதறிவை நிலைநாட்டி
கிள்ளும் பசியகற்ற வழிகாணத் தவறினர் காண்!
மருத்துவம் ஆரூடமுடன் மாகலையாம் சங்கீதமதை
மதித்து நடந்துகொண்டோம்; மாமேதை
ஆதலினுல்
என்றெண்ணினர்—வயிறு பசியால் எரிகிறது!!

•

இந்நிலையிலேயே, இலட்சியம் தேடிடுவோர்
ஆங்கதனை மறந்து அவரவர்க்கு விருப்பமுள,
பங்குகள்—பற்றுகள்—ஆகியவை குறித்தெண்ணி
குறைமதி விளைவாகத்திறம்குலைந்து போவதனுல்
குறிக்கோள்தனைஇழந்து, உழல்வராம் உளம்திரிந்து.

•

ஒன்றில் குறிவைத்தால் அது நன்றென்று
எண்ணல்வேண்டும்
ஆங்கதனைப் பெற்றிடவோ
அயராதுழைக்கவேண்டும்
தூங்கிடுதல் துவண்டிடுதல் தூய்மைக்கு அழகல்ல
தொடர்பில்லாதனவற்றைத் தொட்டிழுத்துக்
கூட்டிவந்து
இடரை வரவழைத்து இலட்சியம் இழந்திடுதல்,
எற்றுக்கு என்பதனை எண்ணிடுவீர் எல்லோரும்.
சாதாரணச் சமயல், அதனைச் செய்திடவோ
சங்கீதம் கற்றவனும் ஜாதகம் கணிப்பவனும்
நோய் தீர்க்கும் மருத்துவனும் கூடி முடியவில்லை
காரணமோ,
குறிக்கோள்தனைக் கெடுக்கும் குறை அறிவு
கொண்டதுதான்.
மற்றும் தமக்கென்று மாமேதாவித் தன்மை
மெத்த இருக்குதென்ற பித்தத்தினுலுங்காண்!

★

9-ம் பக்கத் தொடர்ச்சி

திட்டவட்டமான நம்பிக்கையையும், தீவிரத்தையும், கொண்டிருப்பதால், ஆதித்தனுரிடம் நான் மதிப்புவைக்கிறேன்.

டில்லிப் பேரரசுடன்தான் இணைந்து இருப்போம், வடநாட்டு ஏகாதிபத்தியப் பேரரசில், தமிழ் அரசும் உள்ளடங்கி இருக்கும், என்ருல், இனிக்கவும் இனிக்காது—இதைக் கூற ஒரு தனிக் கட்சியும் தேவையில்லை—இந்த 'அடிமைநிலை'தான் தொடர்ந்து என்ருல் அந்தத் திருத்தொண்டைத் திறம்படநடத்த, காங்கிரஸ் இருக்கவே இருக்கிறது!! 'நாற்காலிமீது முக்காலியாக' ஒரு புதிய கட்சி, அந்தப் பழைய காரியத்துக்காக ஏற்படத் தேவையேயில்லை—சிலருக்குத் 'தலைமை' வேண்டும் என்ற காரணம் காட்டினுலொழிய.

சுடச்சுடப் பழைய சோறு விற்க ஒரு தனிக்கடை வைப்பாரும் உண்டா? வைத்திருக்கிருர்களே!!

நாட்டுமக்கள் இந்தப் போக்கை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதைத் தம்பி, நீயும் நானும் நன்கு உணரத்தக்க நல்லறிவுப் பிரசாரத்தில் நமது தோழர்கள் மிகத் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

எஸ். டி. சோமசுந்தரம், பி. ஈ.,
ஆலடி அருணு, பி. ஏ., பி. எல்.
என். அன்புச்செழியன், எம். ஏ.,
கே. ஏ. கிருஷ்ணசாமி, எம். ஏ., பி. எல்.
முரசொலி மாறன், எம். ஏ.,
உ. பில்லப்பன், எம். ஏ., பி. எல்.
என். வி. என். சோமு, பி. ஏ.,
எஸ். கிருஷ்ணமூர்த்தி, எம். ஏ., பி. எல்.
எம். எஸ். வெங்கடாசலம், எம். ஏ., பி. எல்.
அப்பர்சுந்தரம், எம். ஏ., பி. டி., பி. எல்.
சி. என். ஏ. பரிமளம், (எம். பி., பி. எஸ்.)
ஏனையன், எம். பி., பி. எஸ்.
சிவகுமாரன், பி. ஈ.,
பி. மணிவேந்தன், எம். ஏ.,
டி. கிருஷ்ணன், எம். ஏ.,
ஆர். சேது, எம். ஏ.,
பி. சீனிவாசன், எம். ஏ.,
உ. கணபதி, எம். ஏ.,
டி. நவமணி, எம். ஏ.,
கே. இளஞ்சேரன், எம். ஏ.,
டி. கந்தசாமி, எம். ஏ.,
ஆர். பிச்சை, பி. ஏ., பி. எல்.
பி. ஆடியநம்பி, பி. ஏ., பி. எல்.
பி. எஸ். மணியன், பி. ஏ., பி. எல்.
செல்லையா, பி. ஏ., பி. எல்.
எம். ஏ. மஜீத், பி. ஏ.,
எஸ். அமுதன், பி. ஏ.,

மார்க்கண்டன், பி. ஏ., பி. எல்.
கரந்தை ஜின்னு, பி. ஏ.,
அலிசேக்மன்சூர், பி. ஏ.,
இலட்சுமணப்பெருமாள், பி. ஏ., பி. எல்.
டி. கே. பொன்வேலு, பி. ஏ.,
ஏ. சுப்பிரமணியன், பி. ஈ.,
ஏ. பாலசுப்பிரமணியன், பி. காம்., (ஆனர்ஸ்)
ஏ. தேவராசன், பி. ஏ.,
பி. யு. செழியன், பி. ஏ., (ஆனர்ஸ்)
ஆர். இளந்திரையன், பி. ஓ. எல்.,
ஏ. எல். சுப்பிரமணியன், பி. ஏ., பி. எல்.
கே. இராசாராம், பி. ஏ.,
குமாரி. ஏழிசைவல்லி, பி. ஏ.,
மலைச்சாமி, பி. ஏ., (ஆனர்ஸ்)
கே. எஸ். சம்பத், பி. ஈ., (ஆனர்ஸ்)
கே. பழனிமுத்து, பி. ஏ.,
ஏ. திரவியன், பி. ஏ.,
ஆர். தியாகசாமி, பி. ஏ.,
புதுமதியான், பி. எஸ்சி.,
மோகன்தாஸ், எம். பி., பி. எல்.
குமாரி. எஸ். பி. சற்குணம்
கிருஷ்ணன், பி. ஏ.,
ஆர். நீலகண்டன், பி. ஏ., எல்எல். பி.
சி. கிருஷ்ணன், பி. ஏ., பி. எல்.
சந்திரன், பி. எஸ்சி.,
டி. ஹெர்பர்ட்ஜான்
எம். சி. பாலன், பி. ஏ., பி. எல்.
எஸ். ஆனந்தன், பி. ஏ.,
சிதம்பரம்
எஸ். எம். டி. தாசிம்

•

என்ன பட்டியல்? என்கிருயா தம்பி! நாகர் கோயிலில் நடைபெற இருக்கும் திராவிட மாணவ முன்னேற்றக் கழக மாநாட்டிலே கலந்துரையாட இருக்கும் மாணவர்களின் பெயர்ப் பட்டியல்.

அவர்களென்ன, நம்முடன் இருந்தவர்களிலே சிலர் மாறினோர் ஆகி, திராவிடத்தைத் தாக்க, அந்தத் தாக்குதலைக் காங்கிரஸ் ஏடுகள் வெளியிடுவது கண்டா, மனப் குழம்புவார்கள், மருட்சி அடைவார்கள்! எங்கேனும் உண்டா? இலக்கியத்தில், வரலாற்றில் கண்ட 'திராவிடத்தை' மறந்தா போவர், எரிச்சலால், இல்லை என்றுகூற, இதுவே தக்க சமயம் இந்திய அரசுக்கு வலிவுதேட என்ற எண்ணத்தில், காங்கிரஸ் ஏடுகள், மாறினோர் பேச்சை, மணிமொழிகள் போலாக்கி, நித்த நித்தம் வெளியிட்டுக் காட்டுகிருர்கள் என்பதறியாமல்.

அல்லது, ஐயகோ! திராவிடத்தை, நம்முடன் இருந்தாரே எதிர்க்கின்ருரே, நாமென்ன செய்வோம், என்ரு கலங்கி நிற்பர்! நம்முடன் இருந்தகாலை, திராவிடத்தை எதிர்த்தவரை, இன்று மாறிப்போன 'மாவீரர்' மதித்தனரா? மறுப்புரைக்காது இருந்தனரா? உரைத்த மறுப்பும், எத்தகையது!

மாணவரொருவர் மடலொன்று விடுத்துள்ளார்— அம்மடலில் வேறென்றுமில்லை—திராவிடத்தை மறுத்தோரை, இன்று மாறியுள்ளோரில் ஒருவர் வெளுத்து வாங்கியதோர் பாட்டு மட்டுமே, காணக் கிடைக்கிறது. அதனைக் காண்க;

தென்னாட்டில் வேரூன்றித், திராவிடர் கைக்கலமாகி
பொன்னாட்டை விட்டுப்பிரிந்தார் பொருளாகி
பம்பாயிலிலேயோடி, பர்மாவில் பண்பாடி
பழம்பெரியமலைநாட்டில் பழமாகி, ஈழத்தில்
பீஜித்தீவில் வாழ்கின்ற பெருங்குடிகள் துணையாகி
பேரளவில் இளைத்தோங்கும் பெறற்கரிய கழகத்தை
சுண்டைக்காய் வீரரெல்லாம் தொலைத்துவிட முயல்கின்றார்!
வெண்டைக்காய்க் கூட்டில் விளக்கெண்ணெதனைச்சேர்த்து
வழவழத்த கொள்கையென வழங்குகிற மீசையெலாம்
ஆலை அசைந்திடுமாம்! ஆழியினைத் தூர்த்திடுமாம்!
மாமலையைத்தூக்கி மடுவினிலே போட்டிடுமாம்!
வானைப்பிடுங்கி வாளாக்கி வீசிடுமாம்!
நாநடுங்கும் வார்த்தைகளில் **வானரங்கள்** கத்துதடா!
சிச்சீ; இந்நாடகத்தை சிறு சேயும் நம்பாதே!
கைச்சரக்கில்லாதவர்கள் கதறுவதால்
என்ன பயன்?

புடவை துவைப்பதற்கும்,
பொதி சுமந்து போவதற்கும்
அழுக்கேற்றிச் செல்வதற்கும்
அருந்திறமை பெற்றவரே!
எத்தனையோ **குப்பைகளை** இதற்கு முன்னே
கண்டுவந்தோம்
பொத்தல் கலயங்காள்! போயொழிவீர் நில்லாதீர்.
மாபெரிய கலை எங்கள் மடிதனிலே! கலைஞர்களில்
நாடறிந்தோர் எங்கள் நடுவே! அவர் கூறும்
தேனூறும் செந்தமிழின் திறமெல்லாம் எங்கள் திறம்
இரவல் பொருள்தேடி இளைத்துவிட்ட
ஓநகளே!
அறிவின்றி முன்னேற ஆர்ப்பரிக்கும் **கூடுகளே!**
நீரறிந்ததெல்லாம் நிலையான வயிற்றெரிச்சல்

தம்பி! இப்படி, திராவிடநாடு திட்டத்தைக் கொண்டுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தை ஒழித்துவிடுவேன் என்று பேசியவர்கள்மீது 'கவிதை' பாய்ந்தது; எழுதினோர் மறந்தனர்; படித்தோர் மறக்கவில்லை; பாடம் புரிகிறதல்லவா!!

அண்ணன்,

அண்ணாதுரை

தீயும் தென்றலும்

டி.கே.சீனிவாசன்

விமலா பள்ளிக்கூடத்துக்கு வருவதே இல்லை. பத்மாட்டும் போய் வந்துகொண்டிருந்தாள். தனியே போகவேண்டியாகிவிட்டதால் தலையை நிமிர்த்திச் சுற்றிலும் கவனிக்கவேண்டிய நிலை பெரும்பாலும் அவளுக்கு ஏற்படுவதில்லை. அப்படி எப்போதாவது தப்பித் தவறித் தலையை நிமிர்த்தினால் கண்ணன் எங்கேயாது அவள் பார்வையில் தட்டுப்படுவான். இவளைத் தவிர தெருவில் வேறு எவருமே இல்லாததுபோல, இவளையே பார்த்துக் கொண்டு நிற்பான் அவன். அவனோடு பழகவேண்டும் என்ற ஏக்கம் இவள் மனதில் நிறைந்திருந்தாலும், அந்த நேரங்களில் எரிச்சல்தான் உருவாகும் இவளிடம்.

ஒருநாள், இவள் பள்ளிக்கூடம் போகும்போது, கண்ணன் பின்னாலேயே வருவதுபோலிருந்தது. திரும்பாமலே நடந்துகொண்டிருந்தாள். உடல் இயங்கிக்கொண்டிருக்க, உள்ளம் ஒரே இடத்தில் நின்று தடுமாறிக்கொண்டிருப்பதை அவள் உணர்ந்தாள். அதே நிலையில் நெடுநேரம் தவித்துக்கொண்டிருக்க அவள் விரும்பவில்லை. திரும்பி அவனைப் பார்த்தாள். இதை எதிர்பார்க்காதவன்போல அவன் திடுக்கிட்டு நின்றுவிட்டான்.

"உங்களுக்கு என்னவேண்டும்?"

உள்ளத்தில் ஏற்கனவே அவன் உருவாக்கியிருந்த சொற்கள் இவை மூன்றுந்தான். உடனடியாக ஓடி வந்து வெளியேவிழுந்துவிட்டன.

என்ன சொல்லுவது என்றே புரியாதவன்போல சில விநாடிகள் திகைத்துநின்றான் கண்ணன். பிறகு தன்னைத்தானே சமாளித்துக்கொண்டான்.

"ஒரு சந்தேகம்......"

கேட்கட்டுமா என்பதுபோல அவன் பார்த்தான்; கேட்பதுதானே என்ற பார்வையால் பத்மா அவனை நோக்கினாள்.

"என்னைப்பற்றிப் போலீசில் புகார்செய்தது நீதானே?"

ஆத்திரத்தோடு கேட்டான் அவன்; ஆச்சரியத்தோடு அவனைப் பார்த்தாள் பத்மா.

"இல்லை. நானில்லை. எனக்கு உங்களைத் தெரியவே தெரியாதே!"

"வேறு யார் செய்திருப்பார்கள்? விமலாவா?"

"அதுவும் எனக்குத் தெரியாது."

அதற்குமேல் கண்ணன் அங்கே நிற்கவில்லை; வந்தவழியேநடந்தான். நிம்மதியாகப் புறப்பட்டாள் பத்மா. ஆனால், சிறிது நேரங்கழித்து 'உன்னைத்தானே' என்ற குரல்கேட்டது. திரும்பிப் பார்த்தாள். கண்ணன் நின்றுகொண்டிருந்தான். கோபம் தாங்க முடியவில்லை பத்மாவுக்கு.

"உங்களுக்கு இதுதான்வேலையா? அல்லது என்னோடு விளையாடுகிறீர்களா?" என்று கூச்சல்போட்டாள்.

"இல்லை, நீ புகார் செய்திராவிட்டால் உன்னை ஏன் என்னோடு போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துத் சென்றார்கள்"?

கேள்வியிலிருந்த நியாயம், கேட்டவன்மேலிருந்த கோபத்தைத் தணித்தது.

"நான்தானே உங்களோடிருந்தேன். அதனாலிருக்கும்"

"அப்படியானால்......"

அதை முடிக்காமல் நடந்தான் கண்ணன். அவன் மறைகிறவரை காத்திருந்து, பிறகு நகர்ந்தாள் பத்மா.

அன்றிருந்து பத்மாவிடம் ஒரு அச்சமே உருவாகிவிட்டது. இவனைத் திருத்துவது என்பது.........? உணர்வுகளாலேயே இயக்கப்படும் ஒரு மனிதனை அறிவால் அடக்க முயன்றால், அதை அப்பால் எடுத்தெறிந்துவிடுவானே தவிர, அடங்கியா இருப்பான்? அவனை ஒழுங்குபடுத்தும் முயற்சியில் இவள் உதவாக்கரை ஆகிவிட்டால்......இந்த நினைவால் நடுங்கிற்று அவள் மனம். சத்தமும்சந்தடியும் நிறைந்த கடலை, சலனமற்ற ஓடையால் கட்டுப்படுத்த முடியுமா? கடல்தான் அதைத் தனக்குள் கட்டுப்படுத்தி, அதன் நல்ல நீரையும் உப்புக்கரிக்கச் செய்துவிடுகிறது. அதேபோல, அவன் இவளை...அர்த்தமோ அடிப்படையோ இல்லாமல் பத்மா வளர்த்துக்கொண்ட ஆசைகள் அவளை அலைக்கழித்துக்கொண்டிருந்தன.

நெடுநாட்களுக்கப்பால் ஒருநாள்— விமலா பத்மாவைத் தேடிவந்தாள். அழைத்து அவளை அமரச்செய்த பத்மாவுக்கு, நடந்தவை அத்தனையையும் அவளிடம் கூறவேண்டும் போலிருந்தது. ஆனால் அதற்கு இடங்கொடுக்கவில்லை விமலா. ஒரு திருமண அழைப்பை அவளிடம் தந்தாள். பிரித்துப்பார்த்தாள் பத்மா. மகிழ்ச்சி ஒருபுறம்—மனப்புகைச்சல் ஒருபுறம்! இவளுக்காகத்தான் அவனைத் திருத்தவேண்டும் என்று இத்தனை நாட்களாகத் திட்டங்கள் தீட்டிக்கொண்டிருந்தாள். அதற்கு வேறுயாரையோ தனக்குற்றவனாக்கிக்கொள்ள முடிவு செய்தாள்.

"முதல்நாளே வந்துவிடு, பத்மா. நீ வந்தபிறகுதான் நான் திருமணக்

துக்குத் தயாராவேன்'' என்ருள் விமலா.

"உனக்கு வரப்போகிற அவர் வந்தால்கூட உட்கார்ந்தே இருப்பாயா?'' என்று சிரித்துக்கொண்டே கேட்டாள் பத்மா.

"உட்கார்ந்து இருப்பேனு? அதெப்படி முடியும்? எழுந்து ஓடியே போவேன்!''

இரு தோழிகளும் மனம்விட்டுச் சிரித்தனர். அலையலையாக வெளி வந்த சிரிப்பொலிகள் ஒன்ருேடொன்று இணைந்துகொண்டன. இளமை பொங்கிவழிந்த அந்த இடத்தில் இன்பம் துள்ளி விளையாடிற்று. எதிர்பாராதவளும் எதிர்பார்த்திருப்பவளும் தம்முடைய இதய உணர்வுகளைப் பரிமாறிக் கொண்டனர். மலர்ந்திருந்த அந்தத் தோட்டத்தின் மணத்தைப்பற்றி இருவருக்கும் தெரிந்தே இருந்தது. ஒருத்திதான் உள்ளே நுழையப்போகிருள். இன்னொருத்தி வழியனுப்புவதற்காக வாயில்வரை துணைக்கு வரப்போகிறவள். அவளுக்கும் ஒருநாள் அழைப்பு வரும். அப்போது இவள் வருவாள். உள்ளே இருந்து உள்ளத்தைச் சிலிர்க்கச் செய்யும் எல்லாவற்றையும்பற்றி எண்ணற்ற விவரங்களைக் கூறுவாள்.

பேசிக்கொண்டிருந்தபோதே பத்மாவின் எண்ணங்கள் எங்கெங்கோ அலைந்துகொண்டிருந்தன. அவற்றை இழுத்து இழுத்து தன்னுடைய எண்ணங்களோடு முடிச்சுப்போட எவ்வளவோ முயன்ருள் விமலா. இறுதிவரை அவளால் முடியவில்லை.

முடிவாக, "முதல் நாளே வந்துவிடு, பத்மா! வராவிட்டால் நான் இங்கே வந்துவிடுவேன்'' என்று கூறி விடைபெற்றுச் சென்ருள் விமலா.

விமலா போய் வெகு நாழிகை அப்படியே உட்கார்ந்திருந்தாள் பத்மா. பருவகாலத்தில் உருவாகும் உணர்வுகள் அவளைவிட்டு இதுவரை ஒதுங்கியே இருந்தன. இதற்குக் காரணம், அந்தவிதமான நினைவுகளுக்கே நேரமிருந்ததில்லை அவளுக்கு. அவளுடைய தாய் தன் மகளை, அவளுடைய தந்தைக்குத் தாயாக இருக்கும்படி செய்து விட்டுப் போயிருந்தாள். படிப்பு—தந்தைக்குப் பாதுகாப்பு — குடும்பத்தின் சீரமைப்பு இவை மூன்றுமே அவளுடைய நேரத்தைப் பங்கு போட்டுக்கொண்டிருந்தன. ஆனுல், அன்று வந்த விமலா, அவளுக்கு அறிமுகமாகாததை அருகிலேயே அழைத்து வந்துவிட்டுச் சென்றிருந்தாள்.

அவளுடைய உள்ளம் பூமாரி பொழிந்தது. கண்களுக்குத் தெரிகிற எல்லாவரை மெல்லிதழ்களாக உதிர்ந்துகிடந்தன. மென்மையான நறுமணம் காற்றில் தவழ்ந்துகொண்டிருந்தது. வானத்துத் தாரகைகள் வையத்தை நோக்கித் தாழ்ந்தன. பத்மாவின் தலைக்குமேல் ஒளிவிளக்குகளாக ஒவ்வொன்றும் நிலைத்தன. மின்னல் சிறுசிறு துண்டுகளாகக் கீழே விழுந்தது; பிறகு நாராக உரு மாறிற்று. சிதறிக்கிடந்த இதழ்கள் அத்தனையும் அந்த நாரைச் சுற்றிப் படிந்தன. ஒளியும் மணமும் நிறைந்த அந்த மலர்மாலை அவள் எதிரே இருந்தது. அதை எடுத்து இவள் கழுத்தில் போடவேண்டிய 'அவர்'......! எவரையும் அங்கே காணேம். கண்ணனுடைய உருவம் அவளுக்குத் தெரிந்தது. ஆனுல்... கட்டிளங்காளையாக அவனில்லை; கைக்குழந்தையாகத் தோன்றினுன். தவழ்ந்துகொண்டிருப்பவனை எப்படித், தழுவவேண்டியவனுக ஆக்கிக் கொள்ளுவது? அந்த மணமேடையில் துணையாருமில்லாமல் தனியே உட்கார்ந்திருக்கும் மணமகளாக பத்மா இருந்தாள்.

எதிர்பாராதவிதமாக அவளைச் சுற்றி மேகங்கள் கவிந்தன. வெள்ளைச் சேலை கட்டிக்கொண்டிருந்த அந்தத் தோழிகள், துணையில்லாமல் உட்கார்ந்திருக்கும் மணப்பெண்ணைத் துயரத்தோடு பார்த்தார்கள். அவர்களுடைய உருவம் கருத்தது; உடனே அழத்தொடங்கினர். பத்மாவுக்கும் அழுகை வந்தது. எதிரே மாட்டப்பட்டிருந்த தன் தாயின் படத்துக்கு முன்னுல் விழுந்து "அம்மா'' என்று கதறத்தொடங்கினுள் பத்மா.

"என்னம்மா நடந்தது?'' என்ற குரல் கேட்டுத் திரும்பினுள் பத்மா.

அவளெதிரே தணிகாசலம் பிள்ளை நின்றுகொண்டிருந்தார். வெளியே நல்ல மழை கொட்டிக்கொண்டிருந்தது. தெருவில் சில சிறுவர்கள் மழைநீரில் கைகளை நீட்டிக்கொண்டு அதன் தன்மையை அனுபவித்துக் கொண்டிருந்தனர்.

"ஒன்றுமில்லை, அப்பா'' என்று சொல்லி, தன் கண்களைத் துடைத்துக்கொண்டு எழுந்து நின்ருள் பத்மா.

"ஒன்றுமில்லையா? ஒன்றுமில்லாததற்கெல்லாம் இப்படி அழுகிற நீ, எதாவது நடந்துவிட்டால் எப்படியம்மா தாங்கிக்கொள்ளுவாய்? உன் அம்மா உயிர்பிரிகிற நேரத்தில்கூட அமைதியாக இருந்தாளே! அவளுக்குப் பிறந்த நீயா இப்படி அழுவது? அழாதே அம்மா. போய், கண்களைத் துடைத்துக்கொண்டு முகத்தைக் கழுவிக்கொண்டு வா. வயது வந்த பெண்கள் வளர்பிறையைப் போல அல்லவா வாழவேண்டும்! தேம்பித் தேம்பித் தேய்ந்தா போவது?''

நீண்ட இந்தப் பேச்சை முடிவுவரை நின்று கேட்டுக்கொண்டிருக்கவில்லை பத்மா. சோப்பையும், துண்டையும் எடுத்துக்கொண்டு முகங் கழுவப் புறப்பட்டுவிட்டாள்.

விமலாவின் திருமண நாள் நெருங்க நெருங்க, பத்மாவுக்குப் பல கவலைகள் தோன்றிக்கொண்டிருந்தன. என்ன பரிசளிப்பது, எப்படி அவள் கணவன் வீட்டாரோடு பழகுவது என்பதைப்பற்றியெல்லாம் எண்ணிக்கொண்டிருந்தாள்.

அந்தத் திருமணத்துக்கு முதல் நாளும் வந்துவிட்டது. அன்றுதான் அவளை வரச்சொல்லியிருந்தாள் விமலா. காலையில் போவதா, மாலையில் போவதா என்பதை முடிவு செய்யவே வெகுநேரம் ஆகிவிட்டது. இறுதியில் அவள் மாலையில்போவது என்றும், அவளுடைய தந்தை திருமணநாளன்று காலையில் அங்கே வருவது என்றும், திரும்பும்போது இருவருமே சேர்ந்து வந்துவிடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

பத்மா விமலாவின் வீட்டுக்குப் போனபோது அது மணவீடாகவே தெரியவில்லை. பந்தல் போடப்பட்டிருந்தது. அலங்காரங்கள் அத்தனையும் குறைவில்லாமல் செய்யப்பட்டிருந்தன. ஒளிவிளக்குகள் தேவைக்கு மேலாகவே ஏற்றப்பட்டிருந்தன. ஆனுல், உள்ளேயிருந்தவர்கள் எவருடைய முகத்திலும் மகிழ்ச்சி மருந்துக்குக்கூட இல்லை. எதையோ இழந்துவிட்டவர்கள் போல எல்லோருடைய முகங்களிலும் ஏக்கம் நிறைந்திருந்தது.

என்ன நடந்துவிட்டது என்பது புரியாமலே விமலாவின் அறையை நோக்கி நடந்தாள் பத்மா.

விமலாவின் அறையில் அவளைத் தவிர வேறு எவரும் இல்லை. இவள் உள்ளே நுழைந்ததும் உடனே கதவைத் தாளிட்டாள் விமலா.

"எல்லாம் பாழாகிவிட்டது, பத்மா!" என்று பத்மாவைக் கட்டிக் கொண்டு கதறத தொடங்கினாள்.

"என்ன நடந்தது, விமலா!"

"என்னைத் திருமணம் செய்து கொள்ள அவருக்கு இஷ்டமில்லையாம்!"

"ஏன்?"

"கண்ணன் கடிதம் எழுதியிருக்கிறான். ஏற்கனவே அவனோடு இருந்தவளாம் நான்."

அழுதுகொண்டிருக்கும் தன் தோழிக்கு எப்படி ஆறுதல் கூறுவது என்று பத்மாவுக்குத் தெரியவில்லை.

"அதெல்லாம் பொய் என்று சொல்லிவிட்டால் என்ன, விமலா?" என்று கேட்டாள் பத்மா.

"நான் எழுதிய கடிதங்கள் எல்லாம் அவனிடம் இருக்கின்றனவே"

இனிமேல் என்ன செய்வது என் பதுபற்றிச் சிந்திக்கத் தொடங்கினாள் பத்மா.

(தொடரும்)

4-ம் பக்கத் தொடர்ச்சி

கொண்ட இருவர் அமர்ந்திருந்தார்கள். அவர்களின் முகக்குறியும் பேசிற்று:

"பேசு, பேசு! இவர்களைப்பற்றியும் பேசு. அதே சமயம் நம்மை ஆளாக்கிவிட்டவர்களை மறந்து விடாதே! அவர்கள் இலேசுப்பட்டவர்கள் அல்லர். ஆனைப்பட்டவர்களையெல்லாம் தானுனே பாடவைப்பவர்கள். நம் வேடத்தைக் கலைத்து விடுவது அவர்களுக்குப் பெரிய காரியம் அல்ல. அதற்குள் நாம் அவர்களைத் தாக்கு தாக்கு என்று தாக்கிவிடவேண்டும். தாமதிக்கக் கூடாது. பிறகு பேசுதற்கு இடம் கிடைக்காமற்போகும். மூலையிற் போய் நாம் ஒதுங்கிவிட்ட வேளையில், நம் பேச்சைக் கேட்பதற்கு யாரும் இருக்கமாட்டார்கள். இப்போதே—நாம் என்ன பேசுகிறோம் என்று எல்லாரும் கவனித்துக்கொண்டிருக்கும் இந்த நேரத்திலேயே, கண்டபடி, வாய்க்குவந்தபடி அவர்களை இகழ்ந்து, தூற்றித், திட்டித் தீர்த்து விடவேண்டும். ஆமாம் நாங்கள் சொல்கிறோம். மறந்துவிடாதே! நினைவிருக்கட்டும்—நீ திடீர் தலைவனுவதற்கு நாங்களும் காரணம். உன் பின்னோடே நாங்கள் சுற்றிக் கொண்டு திரிகிறோம். உனக்குக் கிடைப்பதில் எங்களுக்கு ஏதோ—பங்கு கொடுத்தால்மட்டும்போதாது—நாங்கள் சொல்வதையும் கேட்க வேண்டும். மறந்துவிடாதே — எங்கள் மனத்திலே முதல் முதல் 'இந்த' நச்சு விதையைத் தூவிய ஆசாமியே நீதான். நாங்களும் என்னவோ எங்கள் மனச்சான்றை — நம்மை ஆளாக்கிவிட்டவர்களிடமே ஒப்படைத்துவிட்டு, இயந்திரமாகி, நீயே கதியென்றுவெளிறியநெஞ்சத்தோடு வந்துவிட்டோம். இனி எங்களிடம் நல்லதைப்பற்றி யோசிக்கும் ஆற்றலே கிடையாது. நீயும் எப்போதோ அந்த ஆற்றலை இழந்துவிட்டாய்! இப்போது நம் வேலையும் எளிதான வேலை—வளர்த்தவன்மீது குறிபார்த்துக் கட்டாரி எறியும் வேலை. பொழுது கொஞ்சம்தான் இருக்கிறது. அதற்குள் செய்யவேண்டியதையெல்லாம் செய்து முடித்து விட வேண்டும். சுருட்ட முடிந்ததையெல்லாம் சுருட்டிக்கொண்டுவிட வேண்டும். ஆடவேண்டியதையெல்லாம் ஆடி முடித்துவிடவேண்டும். பாடவேண்டியதையெல்லாம் பாடி முடித்துவிடவேண்டும்."

திரும்பவும் தம் கையிலிருந்தஅந்த மல்லிகை மாலையை உற்று நோக்கினார் பெரியசிவம். அதைச் சற்றே உயர்த்தி அதன் நறுமணத்தை முகர்ந்து பார்ப்பதுபோல் பாவனை செய்தார். அந்த வேளை 'எதுவுமே பேச வரவில்லையே எனக்கு' என்ற எரிச்சலும், 'எதையாவது பேசித் தான் ஆகவேண்டும்' என்ற செருக்கும் அவர்பால் தலைதூக்கி நின்ற வேளை. அதன் முன்னிலையாக, கையிற் பிடித்திருந்தஅந்த மல்லிகையின் மணமே பிணவாடையாக வீசிற்றுபோலும், அவருக்கு. சட்டென்று அதைக் கையிலிருந்து கீழே போட்டார் அவர். ஆமாம், மேசைமீதுகூட வைக்கக்கூடாது என்று எண்ணியவர், தரையிலேயே வீசியெறிவதுபோல் அந்த மல்லிகை மாலையைப் போட்டுவிட்டார். ஏதோ, வெறிபிடித்துவிட்டவர்போல் கூச்சல் போட்டுப் பேசத் தொடங்கினார். எதிர்பார்த்தவர்களைக்கூட அவர் பேச்சுத் திகைக்கவைத்தது. அந்த அளவு கட்டுமீறிப் போய்விட்டது அவர் பேச்சு. வாயில் வந்ததையெல்லாம் வாரி வாரி இறைத்தார். கையிலிருந்த மல்லிகை மாலையை வீசியெறிந்தபோதே அவரிடம்—கொஞ்சநஞ்சமிருந்த— சிந்தனையையும் வீசியெறிந்துவிட்டார். மனச்சான்றைத்தான் எப்போதோ தூக்கிப்போட்டு மிதித்துவிட்டாரே!

அவர் ஆடிக்கொண்டு, ஆடிக்கொண்டு பேசினார். கால்களை அப்படியும், இப்படியும் பெயர்த்துவைக்கும்போது கீழே வீசியெறியப்பட்டு விட்ட மல்லிகை மாலை, அவர் காலடியிற் சிக்கி மிதியுண்டது. அது மிதியுண்டபோதெல்லாம் ஒரு கணம் கீழே தம் கண்ணோக்கத்தைச் செலுத்தினார் அவர். அப்போது அந்த அருமையான மல்லிகைமாலை, மல்லிகை மாலையாக அவர் கட்புலனுக்குத் தோன்றவில்லை. அது எருக்க மாலையாகத் தோன்றியது. "உம், எருக்க மாலையையா இது வரை நான் கையில்வைத்து முகர்ந்து பார்த்துக்கொண்டிருந்தேன். ஐயயோ! தவறு செய்து விட்டேன்! இங்கு குழுமியிருக்கும் பெரியவர்களே பொறுத்துக்கொள்ளுங்கள்! மக்களே பொறுத்துக் கொள்ளுங்கள். நான் எருக்க மாலையை மல்லிகையென்று மயங்கி இருந்துவிட்டேன். பொய்சொல்லிக் கொண்டிருந்துவிட்டேன். அதைக் கீழே போட்டபிறகுதான் அது எருக்கமாலை என்று நன்றாக உணர்ந்துகொண்டேன். நான் செய்த இந்தத் தவறு மாபெரும் தவறு. இனி ஒருகாலும் இந்த எருக்கமாலையைக் கையிற்கூடத் தொடமாட்டேன்."

பேசுகின்றஆவேசத்தோடு காலடியிற் கிடந்து நன்றாக மிதியுண்டு விட்ட அந்த மல்லிகை மாலையைப் பார்த்துப் பார்த்துப் பெரு வெறியோடு மேலும் மிதித்து மிதித்துத் தேய்த்தார் அவர்.

அருகில் இருந்தவர்கள் — பெரிய சிவத்தைத் தூண்டிவிட்டவர்கள், அவருடைய உன்மத்தம் பிடித்த தூண்டுகோலுக்கு ஏற்கெனவே இரையாகி, அவருக்குத் துணையாகி விட்டவர்கள், ஆக எல்லாரும்—அது வரை அவர் கையிலிருந்தது மல்லிகை மாலையென்று நன்றாகக்,